**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *நிசேயா விசுவாசப் பிரமாணம் Nicene Creed*

**வானத்தையும் பூமியையும் காணப்படுகிறதும் காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிற சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய ஒரே தேவனை விசுவாசிக்கிறேன்.**

**ஒரே கர்த்தருமாய், தேவனுடைய ஒரே பேறான குமாரனுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்;**
**அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன்னே தமது பிதாவினாலே ஜெனிப்பிக்கப்பட்டவர்;**
**தெய்வத்தில் தெய்வமானவர்,**
**ஜோதியில் ஜோதியானவர்,**
**மெய்த்தேவனில் மெய்த்தேவனானவர்,**
**உண்டாக்கப்படாமல் ஜெனிப்பிக்கப்பட்டவர்,**
**பிதாவோடே ஒரே தன்மையுடையவர்,**
**சகலத்தையும் உண்டாக்கினவர்;**
**மனிதராகிய நமக்காகவும் நமக்கு இரட்சிப்பு உண்டாகவும் பரமண்டலத்திலிருந்து இறங்கி, பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் அவதரித்து மனிதனானார்;**
**நமக்காக பொந்தியுபிலாத்துவின் காலத்தில் சிலுவையில் அறையுண்டு, பாடுபட்டு, அடக்கம் பண்ணப்பட்டார்;**
**வேத வாக்கியங்களின் படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்;**

*பரமண்டலத்துக்கேறி, பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்;*
*உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க மகிமையோடே திரும்ப வருவார்;*
*அவருடைய ராஜ்யத்துக்கு முடிவில்லை.*
*கர்த்தருமாய் ஜீவனைக் கொடுக்கிறவருமாய்,*
*பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமாய்,*
*பிதாவோடும் குமாரனோடும்கூட தொழுது தோத்தரிக்கப்படுகிறவருமாய்,*
*தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்தவருமாயிருக்கிற பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன்.*
*ஒரே பரிசுத்த பொதுவான அப்போஸ்தல திருச்சபை உண்டென்று விசுவாசிக்கிறேன்.*
*பாவமன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட ஒரே ஞானஸ்நானத்தை அறிக்கையிடுகிறேன்.*
*மரித்தோர் உயிர்த்தெழுதலும் மறுமைக்குரிய ஜீவனும் உண்டாகும் என்று காத்திருக்கிறேன்.*
*ஆமென்.*